**செய்தி வெளியீடு எண்:118** **நாள் :20.03.2015**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதல்படி**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள்**
**சிறப்பு பொதுவிநியோகதிட்டத்தின் கீழ் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் போன்ற பொருட்களை பொதுமக்களுக்கு விநியோகம்.**

*******

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள், நியாயவிலைக் கடைகள் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில், போன்ற பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம்.

1) **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** மகத்தான திட்டமான பொதுவிநியோகத்திட்டத்தை எந்தவித குறைபாடுகளுக்கும் இடம் கொடுக்காத வகையில் சிறப்பாக செயல்படுத்த வேண்டும். இதில் எந்த ஒரு புகாருக்கும் இடம் தரக்கூடாது.
2) ஒவ்வொரு நாளும், நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களின் பெயர், ஆரம்ப இருப்பு ஆகிய விவரம், எழுதிவைக்கப்பட வேண்டும்.
3) பொதுமக்கள் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வரும்பொழுது அனைத்து பொருட்களையும் எவ்வித மறுப்பும் இன்றி சரியான எடையில் வழங்க வேண்டும்.
4) ஒவ்வொரு பொருளையும் பெறுவதற்கு பொதுமக்கள் வெவ்வேறு நாட்களில் வரவேண்டும் என பொதுமக்களை அலைகழிக்க கூடாது.
5) அனைத்து நியாயவிலைக் கடைகளும் உரிய நேரத்தில் காலதாமதமின்றி திறந்து வைக்க வேண்டும்.
6) பொதுமக்கள் தங்கள் குறைகளை தெரிவிக்கும் வகையில் துறை அலுவலர்களின் தொலைபேசி எண்களை எழுதி வைக்க வேண்டும்.
7) ஒவ்வொரு நியாயவிலைக் கடைகளிலும் புகார் புத்தகம் மக்களுக்கு தெரியும் வகையில் பராமரிக்க வேண்டும்.
8) வெளிநபர்கள் யாரையும் நியாயவிலைக் கடைக்குள் அனுமதிக்க கூடாது.
9) மேற்கண்ட விதிமுறைகளை கடைபிடிக்காதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**